வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 28.11.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 352 | பக்கங்கள் : 12

# வடக்கு-கிழக்கில் தடைகளை தாண்டி உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள்!

## ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு அஞ்சலி


விசுவமடு
தேராவில் துயிலும் இல்லம்


யாழ்ப்பாணம், நவம்பர் 28

**வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் தடைகளை தாண்டி மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பட்டது.**

*யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், தேராவில் மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் நினைவேந்தல் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன.*

*இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு கடற்கரை,* 11





## கண்ணீரில் நனைந்தது நல்லூர்!



*யாழ்ப்பாணம், நவ. 28*

*யாழ்ப்பாணம் நல்லூரில், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவு மண்டபத்தில், உணவெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.*

*மாவீரர் நாளான நேற்று வடக்கு கிழக்கில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.* 11



## யாழ்.பல்கலையில் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

*யாழ்ப்பாணம், நவ. 28*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று திங்கட்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியில் மாலை 6.05 மணியளவில் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.*

*இதன்போது மாவீரர்கள் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.* 11

## தரவை துயிலுமில்லத்தில் பொலிஸாரினால் குழப்பம்

*மட்டக்களப்பு, நவ. 28*

*மட்டக்களப்பு - தரவை துயிலுமில்லத்தில் கடும் குழப்ப நிலை ஏற்பட்டது.*

*மாவீரர்களை நினைவுகூர்ந்து வடக்கு - கிழக்கு தாயக பகுதிகளில் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப் பட்டன.*

*இந்தநிலையில், மட்டக்களப்பு - தரவை மாவீரர் துயிலும் இல்லத்தின் அஞ்சலி நிகழ்வின் இடையே உட்புகுந்த பொலிஸார் அஞ்சலி நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளனர்.*

*இதன்போது , அங்கு ஒன்று திரண்டிருந்த* 11

## உதயன் பத்திரிகை ஆசிரியரிடம் நேற்று 4 மணி நேர விசாரணை

*யாழ்ப்பாணம், நவ. 28*

*தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காக 'உதயன்'பத்திரிகை ஆசிரியர் த.பிரபாகரன் மாவீரர் தினமான நேற்றுப் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் 4* 11

## லண்டனிலும் நேற்று நினைவேந்தல்

*லண்டன், நவ. 28*

*பிரித்தானியா வாழ் தமிழ் மக்களால் மாவீரர்களுக்கு நேற்று உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.*

*மாவீரர் வாரத்தை முன்னிட்டு கடந்த ஏழு நாட்களாக தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும்* 11

## விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பதவிநீக்கம்!

### ஜனாதிபதி ரணில் அதிரடி நடவடிக்கை

*கொழும்பு, நவ. 28*

*விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியில் இருந்து அமைச்சர் ரொஷான் ரணசிங்க நீக்கப்பட்டுள்ளார்.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அரசியலமைப்பின் ஊடாக தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.* 11

## கவலை இல்லை!

*கொழும்பு, நவ. 28*

*இலங்கையில் உள்ள திருடர்களின் திட்டங்கள் வெற்றி பெற்றுள்ளதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.*

*தம்மை பதவி நீக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை* 11

## ரொஷானின் அமைச்சுக்கள் ஹரின், பவித்ரா வசமாகின!

*கொழும்பு, நவ. 28*

*விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ஹரின் பெர்னாண்டோ பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.*

*நீர்ப்பாசன அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.*

*கொழும்பில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.* 11

## இப்படியும் நடக்கிறது

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு குறித்து நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். பாதுகாப்பு அமைச்சுக்கு வருடா வருடம் அதிக நிதி ஒதுக்கப்படுவது குறித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் பாராளுமன்றில் உரையாற்றிய போது அது குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

இது குறித்து நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதனை படித்துவிட்டு தெற்கின் ஊடகவியலாளர் ஒருவர், 'அவர் அது குறித்தாவது பேசினார், ஆனால் இன்னுமொரு தலைவர் தமிழில் பேசியபோது 'மாவீரர் தினத்தை குழப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் பற்றி தமிழில் உணர்ச்சிபொங்க உரையாற்றினார், ஆனால் அவர் சிங்களத்தில் உரையாற்றிய போது என்ன கூறினார் என்பதை ஓர் ஊடகமும் கண்டு கொள்ளவில்லையே ஏன்?" என்று கேட்டார்.

அப்போது அந்த தலைவர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

அவர் ஒரு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சித் தலைவர். ஆங்கிலத்திலும் நன்றாக பேசக்கூடியவர். அவரிடம் முன்னர் ஒருதடவை கேட்டேன், 'நீங்கள் ஏன் நமது பிரச்சினைகளை ஆங்கிலத்தில் அங்குள்ள சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பேசுவதில்லை." என்று.

அதற்கு அவர் சொன்னார், 'நாங்கள் பேசத் தொடங்குகின்றபோதே அங்குள்ளவர்கள் எழுந்து சென்றுவிடுகின்றார்கள். நாங்கள் பேசுவது தமிழர்களுக்காகத்தானே? அதனால்தான் தமிழில் பேசுகின்றோம்" என்று,

இப்போதெல்லாம் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழில் பேசினால்தான் அது தமிழ் ஊடகங்களில் செய்தியாக வெளிவருகின்றது. வேறு மொழிகளில் பேசினால் அது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பெரும்பாலானவை வெளிவருவதில்லை. அதற்கு காரணம் பல மொழிகளை தெரிந்த ஊடகவியலாளர்களுக்கு இருக்கும் தட்டுப்பாடுதானோ தெரியவில்லை.

அதனால்தான் அன்று பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் நமது எம்.பி ஒருவர் சிங்களத்தில் ஆற்றிய உரையின் சாராம்சம் எதுவும் செய்தியாக வெளிவரவில்லை.

மும்மொழிகளிலும் பேசும் ஆற்றல் உடைய அவர் எப்போது பேசினாலும், தமிழில் பேசுகின்ற விடயங்களை சிங்களத்தில் திரும்ப சொல்வதில்லை. அதேபோல சிங்களத்தில் பேசுகின்ற விடயங்களையும் தமிழில் பேசுவதில்லை. அது எதற்காக என்பதை அவர்தான் அறிவார்.

ஆனால் அன்றைய பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் அவர் சிங்களத்தில் பேசியபோது, இராணுவத்தில் உயர் அதிகாரிகள் நல்ல சம்பளத்தைப் பெறுகின்ற அதேவேளை பல வசதிகளையும் பெற்று வருகின்ற போதிலும், சாதாரண படைசிப்பாய்கள் மிகக்குறைந்த சம்பளத்திலேயே பணியாற்றுவதாகவும் அவர்களுக்கான வசதிகள் செய்யப்படவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்.

பனாகொடை ராணுவமுகாமில் படையினருக்கு படுக்க மெத்தை இல்லை என்ற அவரின் ஆதங்கமும் கவனத்திற்குரியதுதான்.

கோட்டாபாய ராஜபக்ஷ முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது, அவர்களை (படையினரை) மேசன் வேலைக்கும், தச்சு வேலைக்கும், வீதிகளை செப்பனிடும் வேலைகளுக்கும் பயன்படுத்தி அவர்களை வருத்திய போதிலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவில்லை என்றும் அவர் படையினருக்காக, அதாவது இராணுவ சிப்பாய்களுக்காக பேசினார். அதனை அவர் பேசியபோது சிங்களத்தில் மாத்திரம் இதனைக் குறிப்பிட்டார். ஆனால் தமிழில் பேசுகின்ற போது, மாவீரர் தினத்தை குழப்புவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்தது டன், அதற்காக வீராவேசமாக குரல்கொடுத்தார். ஆனால் அதனைக் குழப்புவதிலும் படையினரும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்றுதான் தமிழர் தரப்பில் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. எந்த படையினருக்கு வசதிகள் செய்யப்படவேண்டும் என்று அவர் கோரினாரோ அதே படையினர் மீதுதான் இங்கு குற்றச்சாட்டும் வைக்கப்படுகின்றது.

எதுவோ, படையினருக்காக குரல்கொடுப்பது நல்ல விடயம் தான், பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விடயத்தில் பேசவேண்டிய விடயம் தான், இதுபோன்ற விடயங்களை இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவோ, அல்லது கடற்படை அதிகாரியாக இருந்த சரத் வீரசேகரவோ பேசாதபோது நமது எம்.பி. ஒருவர் பேசியது சிங்கள மக்களுக்கு நிச்சயம் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும்.

இதுபோன்ற அவரது பேச்சுக்கள், அவரை சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யப்படுத்தும் என்பது அவருக்கு தெரியாததல்லவே. அதற்காகத்தான் அவர் பேசுகின்றார் என்றால், அவர் எதற்காக சிங்கள மக்கள் மத்தியில் பேசுபொருளாகவேண்டும் என்று நினைக்கின்றார் என்பதற்கு ஆராய்ச்சி தேவையில்லைத்தான்.

இந்த வேளையில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் (தமிழரசில்) போட்டியிட்டு வெற்றிபெற்று எம்.பி. ஆகிய, சிங்கள இனத்தவரான பியசேன கண்முன்னே தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை.!

- ஊர்க்குருவி.

## தேசபந்து தென்னக்கோனை மூன்று மாதம் பொலிஸ்மா அதிபராக நியமிக்க உத்தேசம்

கொழும்பு, நவ. 28

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரம்பத்தில் மூன்று மாத காலத்துக்கு பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு கடந்த 25ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்திருந்தது.

தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டதையடுத்து வெற்றிடமாகவுள்ள மேல்மா காணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படைத் தளபதி வருண ஜயசுந்தர நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## புதிய தலைமைத்துவத்துக்காக அனைவரும் செயற்படவேண்டும்

### கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரிக்கை

கொழும்பு, நவ. 28

பாரம்பரிய அரசியல் கட்சிகளை நிராகரித்து நாட்டை நேசிக்கும் புதிய தலைமைத்துவத்தை நோக்கி அனைவரும் செயற்படவேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச கத்தோலிக்க ஊடக சேவை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே கர்தினால் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அத்துடன், சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதாகக் கூறி, சர்வாதிகார வழியில் மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை மட்டுப்படுத்தும் வகையில் இந்த சட்டமூலத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளமை தெளிவாக தெரிவதாக அவர் கூறினார்.

நாட்டை சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் இத்தகைய முயற்சிகளை முறியடிக்கவேண்டியது தேசப்பற்றுள்ள, மக்கள் சார்பான ஊடகங்களின் கடமையாகும் எனவும் கர்தினால் வலியுறுத்தினார்.

இந்தநிலையில், இதுவரை நாட்டை ஆண்டுவந்த பாரம்பரிய அரசியல் கட்சிகளை நிராகரிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அரசியல், குடும்ப அரசியல், மதவெறி ஆகியவற்றை ஒழித்து நாட்டில் புதிய மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டியுள்ளதாக கர்தினால் சுட்டிக்காட்டினார்.

மேலும், பாரம்பரிய ஜனரஞ்சக அரசியல்வாதிகளுக்குப் பதிலாக நாட்டை நேசிக்கும் புதிய தலைமைத்துவதை நோக்கி பயணிக்கவேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். (அ)

## போரில் உயிர் நீத்தோர் நினைவாக மன்னாரில் நேற்று விசேட திருப்பலி

மன்னார், நவ. 28

யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து மன்னார் பேசாலை மக்களின் ஏற்பாட்டில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை காலை விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இந்த இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன்போது யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.



## யாழ்.இந்துவுக்கு அருகே மாவீரர் நாள் பதாகை!

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சுற்றுவட்டப் பாதையில் மாவீரர் நாள் பதாகையொன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

"எம் மாவீரர்களின் தியாக வரலாறு வீண்போகக் கூடாது. ஆகவே விழித்தெழு இளம் தலை முறையே.. போதைவஸ்துக்களில் இருந்தும், வன்முறை சமூகத்தில் இருந்தும் விழித்தெழுந்து, அறிவாயுதத்தை பயன்படுத்து" என எழுதப்பட்ட பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள சுற்றுவட்ட பாதையில் 'மாவீரர் நாள்' என பதாகை கட்டப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடியுடன் மேலும் சில பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. (அ)

## பொலிஸ் சேவையில் 20,000 வெற்றிடங்கள்

கொழும்பு, நவ. 28

பொலிஸ் சேவையில் சுமார் 20,000 வெற்றிடங் கள் காணப்படுவதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு வெற்றிடங்களுக்கு சுமார் 5,000 புதிய அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார். இது தொடர்பான நடவடிக்கைகள் அடுத்த வருடத்தின் முதல் பாதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu
28.11.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பேரம்பேசுவதற்கு எஞ்சியிருக்கும் வாய்ப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருவதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அடுத்த ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாக இருக்கின்ற காரணத்தினால் இவ்வாறான கூட்டணிகள் தொடர்பில் ஏராளமான பேரம் பேசல்கள் இடம்பெறவே வாய்ப்புண்டு. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதான வேட்பாளராக அடையாளம் காணப்பட்டாலும் கூட, நிலைமைகள் எவ்வாறு மாற்றமுறும் என்பது தொடர்பில் தெளிவான தகவல்கள் இல்லை. நாடு அரசியல் ரீதியில் ஏதோவொரு வகையில் நெருக்கடி நிலைக்குள் இருக்கின்றது. ஒரு ஸ்திரமான அரசியல் சூழலை ஏற்படுத்துவது அவ்வளவு சுலபமாகவும் இல்லை.

இந்த நிலையில் இவ்வாறான கூட்டணிகள் அடுத்து வரவுள்ள ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது, பெரியளவில் தாக்கம் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்களின் வாக்குள் பிரதான பங்கை வகிக்கும். ஒரு வேளை, ஜனாதிபதியை தீர்மானிப்பதில் தீர்க்கமான பங்கையும் வகிக்கலாம்.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மூன்று ஜனாதிபதி தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக்கும் வாக்குகளாக இருந்த 2015 தேர்தலின்போது மட்டும்தான். 2010 இல், தமிழ் மக்களின் வாக்குகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக பயன்படுத்தப்பட்டது. இறுதி யுத்தத்தின் போது, கோட்டாபயவுக்கு நிகரான பங்களிப்பை கொண்டிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் வாக்களித்தனர்.

மூன்று தேர்தல்களின் போதும், ராஜபக்ஷக்களை வீழ்த்துதல் என்னும் ஒரேயோர் இலக்கு மட்டுமே தமிழ் மக்களுக்கு முன்னால் இருந்தது. 2015இல், ராஜபக்ஷவை தோற்கடிக்கும் வியூகத்திற்காக, மைத்திரியை தமிழ் மக்கள் ஆதரித்தனர். 2020இல், கோட்டபாயவை வீழ்த்துவதற்காக தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தனர். கடந்த மூன்று தேர்தல்களின் போதும், தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றவர்களில் மைத்திரிபால சிறிசேன ஒருவரே வெற்றிபெற்றார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் கூட, தமிழ் மக்கள் எதிர்பார்த்த விடயங்களில் ஆகக் குறைந்தது, சிறியளவில் கூட முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான். அடுத்த ஆண்டு இன்னொரு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தங்களின் வாக்குகளை பிரயோகிக்கப் போகின்றனர். யாருக்கு வாக்களிப்பது - எந்த அடிப்படையில் வாக்களிப்பது - எந்த இலக்கில் வாக்களிப்பது? இது வரையில் ராஜபக்ஷக்களை இலக்காகக் கொண்டு மட்டுமே தமிழ் வாக்குகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் ஒரு வேளை ரணில் விக்கிரமசிங்க போட்டியிடலாம் அல்லது பிறிதொருவர் போட்டியிடலாம் - இந்த நிலையில், கடந்த காலத்தைப் போன்று - எவ்வித இலக்கும் அற்று வாக்களிப்பதா - அல்லது, தமிழ் வாக்குளை, தமிழரின் பேரம் பேசுதலுக்கான கருவியாக கையாள்வதா?

தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்ட எவருமே ஆகக் குறைந்தது தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லை. மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் சில விடயங்களை முன்னெடுப்பதற்கான ஆர்வம் வெளிப்பட்ட பின்னரும் கூட, அந்த விடயங்கள் இறுதியில் தோல்வியடைந்தன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், அடுத்த ஜனாதிபதி தேர்தலையாவது, தமிழ் மக்களால் புத்திசாலித்தனமாக பயன்படுத்த முடியுமா? அதற்கான ஆளுமை தமிழ் கட்சிகளிடம் இருக்கின்றதா?

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்."

**- ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)**



# வீட்டுக்குள் நுழைந்த திருடனை மடக்கிய சுகாதார பரிசோதகர்

*வவுனியா, நவ. 28*

வவுனியாவில் வீட்டினுள் நுழைந்து திருட முற்பட்ட நபர் ஒருவரை மடக்கிப்பிடித்த சுகாதாரப் பரிசோதகர் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் சோயா வீதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை குறித்த வீட்டுக்குள் திருடன் ஒருவன் நுழைய முற்பட்டதை வீட்டின் உரிமையாளரான சுகாதாரப் பரிசோதகர் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து சுதாகரித்துக்கொண்ட அவரும் குடும்பத்தினரும், திருடனை மடக்கிப்பிடித்து மரத்துடன் கட்டிவைத்தனர்.

பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதுடன், திருடனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவத்தில் திருடன் கத்தியால் தாக்கியதில் சுகாதாரப் பரிசோதகருக்கு காயம் ஏற்பட்டது. அவரது சகோதருக்கும் ஒருவருக்கும் சிறுகாயம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நபர் மீது நீதிமன்றில் வேறு வழக்குகளும் நிலுவையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வடக்கு விவசாயிகள், உணவுப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு விசேட செயலி!

*யாழ்ப்பாணம், நவ. 28*

வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வோர், உற்பத்திகளுக்கான நியாயமான விலையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் 'FARM TO GATE' என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



வட மாகாண ஆளுநர் பி. எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய FARM TO GATE செயலிக்கான மென் பொருள் வடிவமைப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 'FARM TO GATE' செயலியை அங்குரார்ப்பணம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த செயலி ஊடாக விவ சாயிகளிடமிருந்து, நுகர்வோர் நேரடியாக தங்களுக்கு தேவை யான உற்பத்திகளை மொத்தமாகவோ அல்லது சில்லறை விலை யிலோ கொள்வனவு செய்ய முடியும்.


அத்துடன் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொள்ளவும், மரக்கறிகள், பழங்கள் மற்றும் ஏனைய உற் பத்தி பொருட்களை காலவதியாகும் முன்னர் விற்பனை செய் துக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நுகர்வோரும் தரமான, புதிய உற்பத்திகளை நேரடியாக பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இதன் மூலம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த செயலியில் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் தரவுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், உற்பத்தி பொருட்களை இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய இடம், உற்பத்திகளின் தரம், கையிருப்பிலுள்ள அளவு, விலை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் தர வேற்றம் செய்யப்பட்டிருக்கும்.

இந்த விடயங்கள் அனைத்தையும் துறைசார் திணைக்களங்களின் கிராமிய மட்ட அலுவலர்கள் மேற்பார்வை செய்ய உள்ளதோடு, விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை ஊக்கப் படுத்த உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**நவம்பர் - 28 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - கார்த்திகை 12**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : பிரதமை**




**மேடம்**
கடந்த 2 நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நல்லது. சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். விழிப்புடன் செயல்படவேண்டும்.

**மிதுனம்**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். மேல் அதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். கவனம் தேவைப்படும்.

**கடகம்**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். இனிமையான நாள்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் நிம்மதி உண்டு. உற்சாகமான நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். அதிகாரியிடம் அளவாகபழகுங்கள். பொறுமைதேவைப்படும்நாள்.

**விருட்சிகம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். எதிர்பாராத நன்மை உண்டாகும் நாள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மகரம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போனகாரியங்கள் முடியும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

# சென்னையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை

சென்னை, நவ. 28

சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் ரூ.52 லட்சம் செலவில் வி.பி.சிங்குக்கு நிறுவப்பட்ட சிலையை நேற்று காலை 11.00 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

சிலை திறப்பு விழாவில் வி.பி.சிங்கின் மனைவி சீதாகுமாரி, மகன்கள் அஜயா சிங், அபய் சிங் மற்றும் அமைச்சர்கள், எம்.பி.க்கள்,எம்எல்ஏக்கள் பங்கேற்றனர். உ.பி. முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக நேற்று காலை தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் எழுதிய கடிதத்தில், “திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான சமூக நீதியை, இந்தியாவின் தவிர்க்க முடியாத அரசியல் கொள்கையாக மாற்றிக் காட்டியவர் வி.பி.சிங். அவருடைய இந்தச் சிறப்பான முடிவின் பின்னணியில் ஊக்கசக்தியாக விளங்கியவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள். சமூகநீதிக் காவலர் எனப் பெயர் பெற்ற வி.பி.சிங் ஆட்சியை, சமூக அநீதியை காலம் காலமாக ஆதரித்தும் - நிலைநாட்டியும் வரும் பா.ஜ.க. கவிழ்த்தது. ஓராண்டு கூட முழுமையாகப் பதவியில் இல்லாவிட்டாலும் இந்தியாவின் மிகச் சிறந்த பிரதமர்களின் வரிசையிலே நிலையான இடத்தைப் பிடித்திருப்பவர் வி.பி. சிங்.





அத்தகைய மாமனிதருக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. அன்று இளைஞரணிச் செயலாளரகவும் இன்று கழகத் தலைவராகவும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் உள்ள உங்களில் ஒருவனான நான் அதனைத் திறந்து வைக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

(அ)

# மன்னிப்பு கேட்கும் வரை ஓயமாட்டோம்!

சென்னை, நவ. 28

பா.ஜனதா தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு சேரிமொழி என்ற வார்த்தையை பயன்படுத்தியதற்கு காங்கிரஸ் தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னிப்பு கோர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். ஆனால் குஷ்பு, தான் தவறாக எதுவும் பேசவில்லை சேரி என்பது தவறான வார்த்தை அல்ல என்று விளக்கம் அளித்தார்.

ஆனால் காங்கிரஸ் அதை ஏற்கவில்லை. குஷ்பு வீட்டை முற்றுகையிட போவதாக அறிவித்து இருந்தனர். இந்த நிலையில் இன்று முற்றுகை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக காங்கிரஸ் எஸ்.சி. துறை மாநில தலைவர் ரஞ்சன்குமார் கூறியதாவது:-

இன்றைய தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை திறப்பு விழா ஆகிய 2 பெரிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் தான் எங்கள் போராட்டத்தை தள்ளி வைத்து உள்ளோம்.





நாளை காலை திட்டமிட்டபடி குஷ்பு வீட்டை முற்றுகையிடுவோம். 500 இற்கும் மேற்பட்ட குடிசைப்பகுதி பெண்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

சேரி என்பது இழிவானது அல்ல என்பதை ஒத்துக்கொள்கிறோம். அந்த வார்த்தையை எதற்காக பயன்படுத்தினார் என்பது தான் முக்கியம். தான் மன்னிப்பு கேட்க போவதில்லை என்று ஆணவமாக கூறி இருக்கிறார். அவர் மன்னிப்பு கேட்கும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை.

தவறான கருத்துக்களை சொல்லி மன்னிப்பு கேட்ட வரலாறும் உண்டு என்பதை அவர் மறக்கக்கூடாது. அதே போல் சேரியை விமர்சித்து கோர்ட்டில் மன்னிப்பு கேட்டவர்களும் உண்டு. எனவே நாங்கள் இதை சும்மா விடப்போதில்லை.

குஷ்பு மீது வழக்கு தொடருவது பற்றியும் இன்று வக்கீல்களுடன் ஆலோசிக்க இருக்கிறோம். எனவே அவர் மீது விரைவில் வழக்கும் தொடருவோம்- என்றார்.

(அ)

# சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவேண்டும்

## மு.க. ஸ்டாலின் வலியுறுத்து



சென்னை, நவ. 28

நாட்டில் உரிமைக்காக போராடும் நிலையே தற்போதும் உள்ளது என முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் ரூ. 52 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின்-

நாட்டில் உரிமைக்காக போராடும் நிலை தற்போதும் உள்ளது. கல்லூரி, நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு துறை நியமனங்களில் பிற்படுத்தப்பட்டவர்கள் போராட வேண்டிய நிலையே உள்ளது.

சாதி வாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும். பட்டியலின பழங்குடியின இடஒதுக்கீடுகளை முறைப்படுத்த வேண்டும்.

எங்கெல்லாம் புறக்கணிப்பு, தீண்டாமை இருக்கிறதோ அங்கெல்லாம் அதை முறிக்கும் மருந்துதான் சமூக நீதி.

சமூக நீதி காவலர் வி.பி. சிங் சிலை திறப்பு நாளில் நாம் ஏற்க வேண்டிய உறுதிமொழி, விளிம்புநிலை மக்களுக்கான உரிமைகளை, அரசியல் செயல் திட்டமாக மாற்ற உறுதியேற்போம்.

வி.பி. சிங் மறையலாம். அவர் ஏற்றி வைத்த சமூக நீதி தீபம் மறையாது. எந்த மாநிலம் மறந்தாலும் தமிழ்நாடு வி.பி. சிங்கை மறக்காது-என்றார்.

(அ)

# மாவீரர்களுக்கு தாயகத்தில் உணர்வுபூர்வ அஞ்சலி


கோப்பாய்




சாட்டி


நல்லூர்




மன்னார் ஆட்காட்டிவெளி




விசுவமடு தேராவில்


மன்னார் பண்டிவிரிச்சான்


முல்லைத்தீவு தேவிபுரம்


முள்ளியவளை


மல்லாவி ஆலங்குளம்


முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால்



முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம்



முல்லைத்தீவு கடற்கரை


முல்லைத்தீவு இரணைப்பாலை


மட்டு.மாவடிமுன்மாரி


மட்டு. தரவை

# உறவுகளை தகுந்த முறையில் நினைவேந்த தடை கிடையாது!

**முல்லை நீதிமன்றில் தெரிவிப்பு**

முல்லைத்தீவு, நவ. 28

**உறவுகளை தகுந்த முறையில் நினைவு கூருவதற்கு எவ்விதமான தடைகளும் இல்லை என கட்டளை வழங்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனித நாயகம் தெரிவித்தார்.**

**பொலிஸார் பல்வேறு தடைகளை விதிக்கின்றார்கள் என கிடைத்த பல முறைப்பாடுகளின் அடிப்படையில் எல்லா வழக்குகளிலும் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு நீதவானால் மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பாக 24 ஆம் திகதி வழங்கப்பட்ட இடைக்கால கட்டளை தொடர்பாக எங்களால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த கட்டளையை ஒவ்வொரு நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளும், ஒவ்வொரு விதமாகக் கூறி பொது மக்களின் செயற்பாட்டுக்கு இடையூறாக இருக்கின்றார்கள் என்பது தொடர்பாக நீதவானின் கவனத்துக்கு கொண்டுவந்தோம்.

குறிப்பாக சிவப்பு, மஞ்சள் கொடிகளை கட்டுவதற்கும், கார்த்திகை பூ வைப்பதற்கும், துயிலும் இல்லம் எனும் வசனம் தாங்கிய பதாதை காட்சிப்படுத்துவது, இறந்தவர்களை நினைவு கூரும் விதமாக இசைக்கப்படும் சோக கீதம் இசைக்கத் தடை எனவும் பொலிஸார் பல்வேறு தடைகளை விதிக்கின்றார்கள் என கிடைத்த பல முறைப்பாடுகளின் அடிப்படையில் எல்லா வழக்குகளிலும் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்துள்ளோம்.

இதனை ஏற்ற நீதிமன்று தெளிவான கட்டளை ஒன்றை வழங்கியிருக்கின்றது. பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்காத வண்ணம் இறந்த ஆன்மாக்களை நினைவு கூருவதற்கு எவ்விதமான தடைகளும் இல்லை. எம்மால் கூறப்பட்டவாறு கார்த்திகை பூவினை இறந்தவர்களின் ஆத்மா நினைவிடத்துக்கு பாவிப்பதற்கும், சிவப்பு மஞ்சள் கொடி பாவிப்பதற்கும்,சோக இசைகள் ஏற்றவாறு ஒலிப்பதற்காக ஒலி பெருக்கியை பயன்படுத்தவும், மாவீரர் எனும் வசனம் பாவிக்காது துயிலும் இல்லம் எனும் பதாதையை வைக்கவும் மன்று அனுமதி வழங்கி இருக்கின்றது.

இது உண்மையில் இறந்தவர்களின் உறவுகளுக்கு நல்ல செய்தி. அவர்கள் தங்களுடைய உறவுகளை தகுந்த முறையில் நினைவு கூருவதற்கும் நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளையாகும்.

இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் பலர் என்னுடன் இணைந்து ஆஜராகி இருந்தார்கள்.இந்த வழக்கில் யாருக்கு எதிராக கட்டளை வழங்கப்பட்டதோ அவர்கள் இங்கே முன்னிலையாகி இந்த வழக்கிற்கான தீர்ப்பை பெற்றுக் கொண்டோம்-என்றார். (அ)

# இலங்கைச் சிறுவர்கள் மலேசியா ஊடாக நாடு கடத்தப்படுவது குறித்து விசாரணை

கொழும்பு, நவ. 28

இலங்கை சிறுவர்கள் மலேசியா ஊடாக நாடு கடத்தப்படுவது தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியன இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

குறித்த விடயம் தொடர்பான பணிப்புரை நேற்று காலை அந்த திணைக்களங்களுக்கு விடுக்கப்பட்டதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்தார்.

இந்நிலையில், மலேசியா ஊடாக குறித்த சிறுவர்களை வேறு நாடுகளுக்கு அனுப்புவதற்காக அவர்களது பெற்றோர்களினால் தரகர்களுக்கு, 75 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர்கள் நாடு கடத்தப்படும் விடயம் தொடர்பாக நீண்ட நாட்கள் விசாரிக்கப்பட்டதன் பின்னர் இந்த தகவல் வெளியாகியுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை 13 சிறுவர்கள் இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரயில் பாதைக்கு அருகே சடலமாக மீட்கப்பட்ட கொலைச் சந்தேகநபர்!

கிளிநொச்சி, நவ. 28

கொலை வழக்கில் சிறைச்சாலையில் இருந்து வந்த நபர் மர்மமான முறையில் ரயில் வீதிக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி நடந்த கொலைச் சம்பத்துடன் தொடர்புபட்டவர் என சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு கடந்த மாதம் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நபரே சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் ரயில் தண்டவாளத்துக்கு அருகில் சடலமொன்றை அவதானித்த பொதுமக்கள் பொலிசாருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து நேற்று அதிகாலை சடலம் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி செல்வா நகர் பகுதியில் சேர்ந்த 22 வயதுடைய ஜோன் பிரகாஷ் என்ற நபரே மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது கொலையா, தற்கொலையா என பல கோணங்களில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# ஒட்டுசுட்டானில் விமானப்படை தாக்குதலில் உயிரிழந்த மக்களின் 33ஆம் ஆண்டு நினைவு





முல்லைத்தீவு, நவ. 28

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் இலங்கை விமானப்படையினரின் தாக்குதலில் உயிரிழந்த 12 அப்பாவி பொது மக்களின் 33 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் சந்திப்பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வை அனுஷ்டிக்க ஏற்பாடாகிக் கொண்டிருந்த வேளை, இலங்கை விமானப்படையினரின் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளன. இதில் 12 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இந்த மக்களின் 33 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு தாய்த் தமிழ் உறவுகள் நினைவேந்தல் அமைப்பு மற்றும் தாய் தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் நினைவு கூரப்பட்டது.

ஒட்டுசுட்டான் சிவன் ஆலயம் முன்பாக அமைக்கப்பட்ட உயிரிழந்தவர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட நினைவிடத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை உயிரிழந்தவரில் ஒருவரின் உறவினர் ஏற்றி வைக்க தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு அவர்களின் உறவினர்களால் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டு நினைவுரைகள் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் உறவுகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (அ)

# சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவரை பாராளுமன்றத்துக்கு அழைக்கவேண்டும்

**சபையில் சஜித் பிரேமதாஸ கோரிக்கை**



"இலங்கைக்கு வரும் ஐ.சி.சி. தலைவரை பாராளுமன்றத்திற்கு அழைத்து உண்மை நிலைவரத்தை சுட்டிக்காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் (ஐ.சி.சி.) தலைவர் அடுத்த சில தினங்களில் இலங்கைக்கு வரவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு வருகை தரும் அவரை நாடாளுமன்றம் அழைக்க வேண்டும். அவ்வாறு அழைப்பு விடுத்து, நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் ஒன்றிணைந்து, இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் ஜனநாயகம் என்ற போர்வையில் பொய் கூறி, இந்நாட்டில் கிரிக்கெட்டை எவ்வாறு அழித்து வருகின்றது என்பதை அவருக்கு விளக்க வேண்டும். இல்லையெனில் தவறான கருத்து சர்வதேசத்திற்கு செல்லும்-என்றார். (அ)

# பஸ் நடத்துநரின் கை விரல் வெட்டிவிட்டு 7,300 ரூபாவை கொள்ளையிட்ட இருவர் !

கொழும்பு, நவ. 28

உடஹமுல்ல இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போவில் கடமையாற்றும் பஸ் நடத்துநர் ஒருவரின் விரலை கத்தியால் வெட்டிவிட்டு அவரிடமிருந்த 7,300 ரூபாவை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

காயமடைந்த நடத்துநர், இங்கிரிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படாது!

## உறுதியாக கூறுகிறார் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, நவ. 28

**ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லையென சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.**

கொத்மலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே ஆளுநர் நவீன் திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த பாராளுமன்றத்தில் செயற்பட்ட விதம் பாராளுமன்ற மரபுக்கு எதிரானது.

பாராளுமன்ற மரபு மீறப்பட்டால், அது தொடர்பில் செயற்பட சபாநாயகருக்கு அதிகாரம் உள்ளது. சனத் நிஷாந்த எம்.பி செய்தது தவறு, அதைச் செய்திருக்கக்கூடாது.

2018ஆம் ஆண்டு இது போன்ற ஒரு சம்பவம் நடந்தது. அப்போதும் பாராளுமன்ற ஒழுக்கத்தை மீறி சபாநாயகரை தாக்க முயன்றனர். அதே குழு இந்த முறையும் அதே வழியில் நடந்து கொண்டமை கவலைக்குரிய விடயமாகும்.

பாராளுமன்றத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் அடுத்த வருடம் நடைபெறும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆனால், தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பதாக சிலர் வதந்திகளை பரப்பி வருகின்றனர்.



அவ்வாறு தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டால் ஜனாதிபதி பதவி பறிபோகலாம். அதனால் தான் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்-என்றார்.

(அ)

# பாராளுமன்றத்தின் சிறப்புரிமை சட்டங்கள் திருத்தப்படவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, நவ. 28

பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி தனிப்பட்ட ரீதியில் அவதூறுகள் பேசுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்காக புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுவது அவசியமாகும். அல்லது தற்போதுள்ள சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் ஒன்றிணைந்து ஒழுக்கமற்ற பேச்சுகளை கட்டுப்படுத்தவேண்டும்.

உறுப்பினர்களின் குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் உறவினர்களை அவதூறாகப் பேசுவதற்கு பாராளுமன்ற சிறப்புரிமைகள் பயன்படுத்தப்படுகின்றன.



இவ்வாறு பகிரப்படும் மோசமான கருத்துகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில் எதையும் கூறலாம் என்ற சிறப்புரிமைகளில் திருத்தங்கள் அல்லது புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# குற்றப்புலனாய்வு பிரிவு ரவிகரனிடம் விசாரணை

முல்லைத்தீவு, நவ. 28

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வீரசிங்கம் ஆகிய இருவரிடமும் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இரட்டை வாய்க்கால் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையில் கார்த்திகை பூ இருப்பதாகவும், மாவீரர் நாள் என்ற சொற்பதம் இருப்பதாகவும் அதனை அகற்றவேண்டும் எனவும் பொலிஸார் அவ்விடத்துக்கு சென்று முரண்பட்டிருந்தனர்.

அதனையடுத்து மக்களும், ஏற்பாட்டுக் குழுவினரும் அதனை அகற்றமுடியாதென கூறியிருந்தனர். இதனையடுத்தே குறித்த விசாரணை இடம்பெற்றது.

விசாரணை தொடர்பாக ரவிகரன் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து ஒரு மணித்தியாலமாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவ் விசாரணையில் இரட்டை வாய்க்கால் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட கார்த்திகை பூ மற்றும் மாவீரர் நாள் என எழுதப்பட்டமை தொடர்பாகவே வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தது.

நாம் நீதிமன்ற கட்டளைகளை மீறவில்லை. இனியும் மீறமாட்டோம். நவம்பர் 27 எழுச்சியாக இடம்பெற இருக்கும் நாளினை பொலிஸார் திட்டமிட்டு குழப்பவேண்டும் என ஈற்றிலே விசாரணைக்கும் அழைத்து தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் நாங்களும் எமது உரிமையை , நினைவு நாளினை நினைவு கூருவோம். தேவிபுரம், மாத்தளன், அளம்பில், முள்ளியவளை, முல்லைத்தீவு கடற்கரை, முள்ளிவாய்க்கால் போன்ற பல பகுதிகளில் குழப்ப நிலை ஏற்படுத்தப்பட்டது.

அத்தோடு மஞ்சள், சிவப்பு கொடிகளையே கட்டவேண்டாம் என்ற நிலை தான் காணப்பட்டது. பொலிஸார் தாங்கள் நினைத்தது போல், தங்களுக்கு ஏற்றால் போல் குழப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுகிறார்கள்.

முன் நின்று செய்பவர்களை பொலிஸ் நிலையம் அழைப்பதும் அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதும் இடையூறுகள் ஏற்படுத்துவதுமே இவர்களது நோக்கமாகும்.

குழப்பநிலை எவ்வாறு இடம்பெற்றாலும் இறந்தவர்களது நாளினை நினைவு கூருவோம்-என்றார்.

(அ)

# அளம்பில் துயிலும் இல்லத்தில் வீதியோரத்தில் கட்டப்பட்ட கொடிகளை அகற்றிய பொலிஸார்

முல்லைத்தீவு, நவ. 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீதி ஓரத்திலே கட்டப்பட்டிருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகளை பொலிஸார் அகற்றிய நிலையில் அங்கு நின்ற மக்கள் ஆத்திரமடைந்து பொலிஸாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

துயிலும் இல்ல காணி யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது எஸ்.எல்.என்.ஜி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த துயிலும் இல்லத்தில் மக்கள் அஞ்சலி செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

துயிலுமில்லக் காணியிலிருந்து இராணுவத்தினரை வெளியேறுமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர்.

இராணுவத்தினர் அங்கிருந்து இதுவரை வெளியேறாத நிலையில் வீதி ஓரத்தில் மக்கள் சுடரேட்டிய அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள்.

துயிலும் இல்ல காணி தனியார் காணியாக காணப்படும் நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பில் இல்லாத ஒரு பகுதிக் காணியை தனிநபர் ஒருவர் காணி உரிமையாளரிடருந்து பெற்று வர்த்தக நிலையமொன்றை அமைத்து நடத்தி வருகிறார்.

இதற்கும் மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.





இந்நிலையில் இம்முறை மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகளை செய்தபோது இந்த வர்த்தக நிலையத்துக்கு முன்பாக கொடிகளைக் கட்டி விளக்குகள் வைக்கவேண்டாம் என ஏற்பாட்டாளர்களுடன் வர்த்தக நிலைய உரிமையாளர் முரண்பட்டுள்ளார். இதன்போது பணிக்குழுவினருக்கும் கடை உரிமையாளருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது.

பொலிஸார் அங்கு வந்து இரண்டு தரப்பைச் சேர்ந்தவர்களிலும் சிலரை பொலிஸ் நிலையம் அழைத்து வந்ததோடு குறித்த இடத்தில் இருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகளை அகற்றியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவை சேர்ந்த ஒருவர் கடை உரிமையாளர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# கைக் கடிகாரத்துக்குள் 3 போதைப்பொருள் பொதிகள் மறைத்து வைத்திருந்தவர் கைது!

கொழும்பு, நவ. 28

மொரகஹஹேன பொலிஸ் பிரிவின் ஒலுபொதுவ பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது போதைப்பொருள் கடத்தும் புதிய முறை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஹெரோயின் பொதிகளை கொண்டு செல்வதாக மொரகஹஹேன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபரைக் கைது செய்து சோதனைக்கு உட்படுத்திய போதிலும் போதைப்பொருள் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனையடுத்து, சந்தேக நபரின் கைக்கடிகாரத்தின் பின் பகுதியை அகற்றியபோது, மூன்று போதைப்பொருள் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர் பல்வேறு பகுதிகளுக்கு போதைப்பொருள் பொதிகளை விநியோகித்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் பணத்துக்காக பெண்களை விற்பனை செய்யும் இடமொன்றின் முகாமையாளர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

(அ)

# நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்தில் எஞ்சிய தென்னைகளும் சரிந்தன!

அம்பாறை, நவ. 28

**அண்மையக்காலமாக அம்பாறை மாவட்டத்தின் கிழக்கு கடல் பரப்பில் அடிக்கடி ஏற்படும் கடல் கொந்தளிப்பால் ஏற்படும் பாரிய அலைகள் கரையை நோக்கி வருவதனால் தினசரி நிந்தவூர் கடற்கரை பிரதேசம் காவு கொள்ளப்படுவதனால் மீனவர்களும் சுற்றயல் பிரதேச குடியிருப்பாளர்களும் சொல்லொணா துயரங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.**

கடற்கரைப் பிரசேத்திலுள்ள பயன்தரும் தென்னைமரங்கள் கடலரிப்பினால் தரையில் வீழ்ந்து காணப்படுவதுடன் அவற்றின் வேர்களும் தரைக்கு மேலாக வெளிவந்தும் உள்ளது.



இதனால் தென்னம் தோட்டங்களை பராமரித்து வருவோர் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருவதுடன் மீனவர்கள் தாம் ஓய்வுஎடுப்பதற்கும், தமது தோணி, படகு, மீன்பிடி வலை என்பவற்றை திருத்துவதற்காக பயன்படுத்தும் இயற்கையான நிழலும் இல்லாமல்போயுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

நிந்தவூர் கடற்கரை பிரதேச மீனவர்கள் தமது தோணி மற்றும் படகுகளையும் நிறுத்தி வைப்பதற்கு தற்போது போதிய இடவசதியும், தமது மீன்பிடி உபகரணங்களை பாதுகாத்து வைப்பதற்கான மீன்வாடிகளும் இல்லாமலிருப்பது தமக்கு பெரும் கவலையளிப்பதாகவும், இந்த நிலைமை ஏற்படுவதற்கு ஒலுவிலில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகமும் ஒரு காரணமாகும் என பிரதேச மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தற்போது கடலரிப்பை தடுப்பதற்கான தடுப்புக் கல் இடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)



# பொத்துவில் பிரதேசத்தில் முதியோருக்கு உதவிகள்

அம்பாறை, நவ. 28

சிறுவர் மகளிர் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் முதியோர் தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வயோதிபர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்களைக் கையளிக்கும் நிகழ்வு பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.ஐ.பிர்னாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 28 சிரேஷ்ட பிரஜைகளுக்கு இவ்வுதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள வயோதிப நோயாளிகள், நீண்ட கால படுக்கையில் உள்ள முதியோர்கள், வருமானமற்ற சிரேஷ்ட பிரஜைகள் போன்ற தெரிவு செய்யப்பட்ட முதியோருக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கென கட்டில் மெத்தைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான உதவிப் பொருட்களை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.இராமக்குட்டி, முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் இசட்.பர்ஸான், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.ஏ.சனூசியா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (அ)



# திருக்கார்த்திகையை ஒட்டி விசேட பூரணை யாகம்!

காரைதீவு, நவ. 28

திருக்கார்த்திகை விளக்கீடு விழாவையொட்டி காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி ஆலயத்தில் விசேட பூசையும் பூரணை மகாயாகமும் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

முன்னதாக கோமாதா பூசை இடம்பெற்றது.

திருக்கார்த்திகையை ஒட்டி 210 சித்தர்களை எழுந்தருளச் செய்யும் விசேட பௌர்ணமி மகா யாகம் சிறப்பாக நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் மத்தியில் இடம் பெற்ற யாகத்தை தொடர்ந்து விசேட பூசை இடம்பெற்றது.

இறுதியில் அன்னதானமும் நடைபெற்றது. (அ)

# திருகோணமலை உள்ள பழைய டச்சு கட்டடத்தின் காணிப் பகுதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு!

திருமலை, நவ. 28

திருகோணமலை நகரில் பழைய டச்சு கட்டிடம் அமைந்துள்ள காணியை சுற்றுலா அபிவிருத்தி திட்டத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதிக்கான பெருநகர அபிவிருத்தித் திட்டத்தை ஏற்கனவே நகர அபிவிருத்தி அதிகாரசபை தயாரித்து 1534/8 என்ற விசேட வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். வணிக மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் திட்டத்தின் கீழ் உள்ள பகுதி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் திருகோணமலை. நிலாவெளி கடற்கரை, மார்பிள் கடற்கரை, இயற்கை துறைமுகம், பிரெடெரிக் கோட்டை மற்றும் நகரத்தில் உள்ள பல தொல்பொருள் இடங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாக அமைந்துள்ளது.

திருகோணமலைக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, நகரின் பொது வசதிகளை மேம்படுத்துவது அவசியம். அதற்காக திருகோணமலை இன்னர் ஹார்பர் வீதியில் அமைந்துள்ள பழைய டச்சு கட்டடத்தை பயன்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளதாகவும், அது எவ்வித பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாமல் உள்ளதாகவும் அமைச்சரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தின் புராதனத் தன்மையைப் பாதுகாத்து திருத்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக திருகோணமலைக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பொழுதுபோக்கு வசதிகள், நவீன உணவகங்கள், ஹோட்டல்கள், நகர அலங்காரம் மற்றும் சுகாதார வசதிகள் மற்றும் பல்பொருள் வணிக வளாகம் என்பன இதன் கீழ் மேம்படுத்தப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சாய்ந்தமருது அறிஞர்கள் கௌரவிப்பு

அம்பாறை, நவ. 28

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் "ஒளிரும் அறிஞர்கள் - 2022" எனும் தொனிப் பொருளில் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.




பாடசாலையின் அதிபர் யூ. எல். நசார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதோடு, அம்பாறை மாவட்ட பொறியியலாளரும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயலாளருமான ஏ.எம். சாஹிர், கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜாபிர் மற்றும் திருமதி பீ. ஜிஹானா ஆலிப், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலிக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் திருமதி ஏ. அஸ்மா மலிக், ரியோ மார்க்கெட்டிங் தலைவர் என். எம்.றிஸ்மீர், பொறியியலாளர் எம்.சி.கமால் நிஷாத், முன்னாள் அதிபர் ஐ. எல். ஏ. மஜித் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் அதிதியாக ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹ்ருன் உட்பட பாடசாலையின் அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர்கள், அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

2022இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 44 மாணவ, மாணவிகள் உட்பட அதிதிகள் அனைவரையும் பாரம்பரிய கலையான சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீனின் பொல்லடி கோலாட்டக் குழுவினரால் வரவேற்பு அளிக்கப்பட்டு, பாண்ட் வாத்தியங்கள் முழங்க பிரதான வீதி வழியாக அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது, அதிபர், பிரதி, உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் அவர்களது அயராத சேவைக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# பலஸ்தீனர்களின் நிலங்களை சூறையாடும் இஸ்ரேலியர்கள்!

ஜெருசலேம், நவ. 28

**ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைப் பகுதியில் உள்ள விவசாயிகள் இஸ்ரேலிய குடியேற்றவாசிகளினால் நாளாந்தம் ஊடுருவல் மற்றும் வன்முறைகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.**

**இதன் காரணமாக தமது குடியிருப்புகள் மற்றும் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் பலஸ்தீன விவசாயிகள் வாழ்ந்துவருவதாக குறிப்பிடப்படுகிறது.**



இஸ்ரேலிய இராணுவம் ஒரு வாரத்தில் 10 பேரை கொன்றதுடன், 20 பேரை காயப்படுத்தியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கடந்த ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியில் இஸ்ரேலியப் படைகளால் சுமார் 237 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், சுமார் 2,850 பேர் காயமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, பலஸ்தீனம் ஒலிவ் எண்ணெய் மற்றும் காய்கறிகளுக்கு பெயர்பெற்று காணப்படுகிறது.

அத்துடன், பலஸ்தீனத்தில் இருந்து ஒலிவ் எண்ணெய் மற்றும் காய்கறிகள் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த நிலையில், 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 700,000 இஸ்ரேலியர்கள் பலஸ்தீன பகுதிகளில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளனர்.

இவ்வாறு குடியேறியவர்கள் பலஸ்தீனியர்கள் ஒலிவ் தோப்புகள், விவசாய நிலங்கள் மற்றும் சொத்துக்களை சூறையாடுவதுடன், அழித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(அ)



# சியரா லியோனில் ஊரடங்கு!

பிரீரவுண், நவ. 28

ஆயுதமேந்தியவர்கள் சிறைக்குள் புகுந்து கைதிகளை விடுவித்ததை அடுத்து, சியரா லியோனில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் வசிப்பவர்கள் வீட்டிற்குள் இருக்க 'கடுமையாக' பரிந்துரைக்கப்படுகிறார்கள் மற்றும் நாட்டின் ஒரே சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து மேற்கு ஆபிரிக்க நாட்டின் தகவல் அமைச்சர் ஜூலியஸ் மாடா பயோ கூறுகையில், 'பல சிறைகளில் இருந்து கைதிகள் ஞாயிற்றுக்கிழமை காலை விடுவிக்கப்பட்டனர். தாக்குதலுக்குப் பின்னால் இருந்த பெரும்பாலான தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வுகள் 'பாதுகாப்பு மீறல்' மற்றும் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல். தற்போது அமைதி திரும்பியுள்ளது. ஆனால் குற்றவாளிகள் யார் அல்லது அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை' என அவர் கூறினார்.

(அ)

# மிகப்பெரிய பனிப்பாறை நகர்ந்து வருவதாக தகவல்



லண்டன், நவ. 28

மிகப்பெரிய பனிப்பாறை நகர்ந்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தார்ட்டிகாவின் கடலின் அடிப்பகுதியில் இருந்த இந்த பனிப்பாறை பல தசாப்தங்களுக்கு பிறகு இவ்வாறு நகர ஆரம்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

இது பிரிட்டனின் தலைநகரை விட இரண்டு மடங்கு பெரியதாக கருதப்படுகிறது.

இந்த பெரிய பனிப்பாறை 1986 இல் பில்ச்னர்-ரோன் பனிக்கட்டியிலிருந்து உடைந்து அண்டார்டிகாவில் உள்ள வெட்டல் கடலில் புதைந்தது.

பிரித்தானிய அந்தார்ட்டிக் விஞ்ஞானிகளான எல்லா கில்பர்ட் மற்றும் ஆலிவர் மார்ஷ் ஆகியோர், சுமார் மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு, பனிப்பாறையின் இயற்கையான வளர்ச்சி சுழற்சியின் ஒரு பகுதியாக, கடற்பரப்பில் தனது பிடியை இழக்கும் அளவுக்கு பனிப்பாறை உருகி இப்போது நகர்கிறது என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

# உலகின் மிகப்பெரிய நிலக்கரி துறைமுகத்தில் இரண்டு நாள் காலநிலை எதிர்ப்பு போராட்டம்!

## *100 இற்கும் மேற்பட்டோர் கைது!!*

கான்பரா, நவ. 28

உலகின் மிகப்பெரிய நிலக்கரி துறைமுகத்தில், இரண்டு நாட்கள் காலநிலை எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு அப்பகுதியை முற்றுகையிட்ட 109 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் நியூகேஸில் துறைமுகத்தின் கப்பல் பாதையை ஆக்கிரமித்து, போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான ஆர்வலர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

அரை மில்லியன் டன் நிலக்கரி நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடை செய்ததாக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

அவுஸ்திரேலியா முழுவதிலும் இருந்து சுமார் 3,000 பேர் அதன் கப்பல் பாதையின் 30 மணி நேர வார இறுதி முற்றுகையில் பங்கேற்றனர், இந்தப் போராட்டம் பொலிஸாரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், டசன் கணக்கான எதிர்ப்பாளர்கள் போராட்ட எல்லையை மீறி தண்ணீரில் இறங்கி போராட்டம் நடத்தினர்.




இதனால், 109 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட ஐந்து சிறார்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

திங்களன்று, நியூ சவுத் வேல்ஸ் பொலிஸாரின் அறிக்கையின் படி, துறைமுக கால்வாயை விட்டு வெளியேற மறுத்ததற்காக 104 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அவுஸ்ரேலியா உலகின் இரண்டாவது பெரிய நிலக்கரி ஏற்றுமதியாளராக உள்ளது மற்றும் அதன் சொந்த மின்சார தேவைகளுக்கு புதைபடிவ எரிபொருளை நம்பியுள்ளது.

சிட்னியிலிருந்து சுமார் 170 கிமீ (105 மைல்) தொலைவில் அமைந்துள்ள நியூகேஸிலின் துறைமுகம் நிலக்கரி ஏற்றுமதிக்கான நாட்டின் மிக முக்கியமான முனையமாகும்.

(அ)

# லண்டனில் யூத எதிர்ப்புக்கு எதிரான பேரணியில் பங்கேற்ற இருவர் கைது!

லண்டன், நவ. 28

மத்திய லண்டன் வழியாக நகர்ந்த யூத எதிர்ப்புக்கு எதிரான பேரணியில் கலந்துக்கொண்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக, மெட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இங்கிலீஷ் டிபென்ஸ் லீக் நிறுவனர் டொமி ரொபின்சன், அமைப்பாளர்களால் கலந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்ட போதும், அதனை மீறி செயற்பட்ட அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதுதவிர, மக்கள் கூட்டம் வைட்ஹாலில் இருந்து வெளியேறும் போது யூத விரோத கருத்துக்களை தெரிவித்ததற்காக ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்திய லண்டன் வழியாக யூத எதிர்ப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உட்பட இஸ்ரேல்-காசா போர் தொடங்கியதிலிருந்து நடந்த முதல் அணிவகுப்பில் 100,000 பேர் பங்கேற்றதாக அமைப்பாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

ரோயல் கோர்ட் ஒப் ஜஸ்டிஸ் வெளியே கூடி, வைட்ஹால் வழியாக பாராளுமன்ற சதுக்கத்திற்குச் சென்ற பெரும் கூட்டம், அங்கு பேரணியில் கலந்து கொண்டது.

'பிரிட்டிஷ் யூதர்களுடன் தோளோடு தோள் சேருங்கள்' மற்றும் 'எப்போதும் இல்லை' போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை கலந்து கொண்டவர்கள் ஏந்திச் சென்றதைக் காண முடிந்தது.



குறிப்பாக தலைநகரின் யூத சமூகத்திற்கு எதிரான வெறுப்பு குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த பேரணி வந்துள்ளது.

(அ)

# வங்குரோத்து நிலையிலிருந்து நாடு டிசெம்பரில் மீண்டெழும்!

## கூறுகிறார் ரவி கருணாநாயக்க



கொழும்பு, நவ. 28
டிசெம்பர் மாதம் எட்டாம் திகதி நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழும் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கடந்த காலங்களில் முன் வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை பார்க்கிலும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் சிறந்தது.

வரவு-செலவுத் திட்டம் என்பது எதிர்காலத்தின் வருமானம் மற்றும் காணப்படும் வளங்களை பயன்படுத்தி எவ்வாறு வருமானத்தை ஈட்டுவது போன்றவற்றை அடிப்படையாக கொண்டது. அதனை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் காண முடிகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இதை விட சிறப்பாக செயற்படுவது நல்லது. ஆனாலும் முடியாத பட்சத்தில் இதனை பெற்றுக்கொடுப்பது மதிப்பளிக்கக்கூடியது.

டிசெம்பர் எட்டாம் திகதி நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீளும். அதனை நோக்கிய பயணத்தை தான் காணக்கூடியதாக இருக்கின்றது.

நாட்டின் வங்குரோத்து நிலையை இல்லாதொழித்து முன்னோக்கிச் செல்ல வேண்டியது அவசியம்.

வங்குரோத்தி நிலையை அறிவிப்பது ஒரு பகுதி அதனை சரிசெய்து அதிலிருந்து மீட்டெடுப்பது இன்னொரு பகுதி.

இவை எல்லாவற்றிலும் மக்களே பாதிக்கப்படுவார்கள். ஆகவேதான் மக்கள் வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு அதனை இலகுபடுத்தி செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# கிழக்கு ஆளுநர் மாற்றம் இல்லை?

கொழும்பு, நவ. 28
நீதிமன்றால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹ்மட் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென தகவல்கள் வெளியாகியுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பின்னர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஹாபிஸ் நஸீர் அஹ்மட்டுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் வழக்கு தாக்கல் செய்தது.

இந்த வழக்கில் அவருடைய பாராளுமன்ற பதவி பறிக்கப்பட்டது.

இந்த நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை ஊவா மாகாண ஆளுநராக நியமித்து விட்டு, அதற்கு பதிலாக ஹாபிஸ் நஸீரை கிழக்கு ஆளுநராக,ஜனாதிபதி நியமிக்க இருப்பதாக சமூக வலைதளங்களில் செய்திகள் பகிரப்பட்டுள்ளன.

எனினும், அடுத்த தேர்தல் வரை கிழக்கு ஆளுனர் உள்ளிட்ட ஆளுனர் பதவிகளில் எவ்வித மாற்றமும் செய்யும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# 5 பெண்கள் உட்பட 40 பேர் கைது!

கொழும்பு, நவ. 28
வெல்லம்பிட்டி பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 40 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 05 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்த விசேட தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சிறுவர் காப்பகம் ஒன்றில் 20 சிறுமிகள் துஷ்பிரயோகம்

கொழும்பு, நவ. 28
சிறுவர் இல்லமொன்றின் காவலாளியின் கணவனால், அந்த இல்லத்தில் இருக்கும் 20 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

குற்றவாளி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த காப்பகத்தில், கடந்த சில நாட்களுக்குள் மேலும் நான்கு சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளனர் என்றும் தகவல் பதிவாகியுள்ளது.

கடந்த மாதத்தில் துஷ்பிர



யோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சிறுமிகளின் மொத்த எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது- என்றார் அவர். (அ)

### புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கபடும்வரை

# சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் வழமைபோன்று கடமையாற்றுவார்கள்!

கொழும்பு, நவ. 28
புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படும்வரை 09 மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் வழமை போன்று மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறவிருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருக்கு நான்கு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கினார்.

எவ்வாறாயினும் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன கடந்த வெள்ளிக்கிழமை தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

அவர் பதவியில் இருந்து ஓய்வு பெறுவதாக அனைத்து சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதற்கமைவாக புதிய பொலிஸ் மா அதிபர் அடுத்த வாரம் அறிவிக்கப்படுவார் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைவாக புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படும் வரையில் 09 மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் வழமை போன்று மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (அ)

# கட்டுநாயக்க கணினி கட்டமைப்பு செயலிழப்பு

கொழும்பு, நவ. 28
கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவுத் திணைக்களத்தின் கணினி கட்டமைப்பு நேற்று முன் தினம் பிற்பகல் செயலிழந்ததால் வெளிநாடு செல்வதற்காக வந்திருந்த பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த கணினி கட்டமைப்பு பல தனியார் துறை நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

முறையான பராமரிப்பு இல்லாததால், இந்த கட்டமைப்பு இதற்கு முன்னரும் பல தடவைகள் பழுதடைந்துள்ளது.

எவ்வாறாயினும், நேற்று முன் தினம் பிற்பகல் வேளையில் செயலிழந்த கணினி கட்டமைப்பு மீண்டும் சீர்செய்யப்பட்டதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கட்டுநாயக்க விலிருந்து சீனாவின் குவாங்சூ நகருக்கு புறப்படவிருந்த சிறீலங்கன் விமான சேவையின் விமானம் இரத்துச் செய்யப்பட்டதால், பயணிகளுக்கும் விமான பணியாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த விமானம் ரத்து செய்யப்பட்டதால் சில பயணிகள் சுமார் 22 மணிநேரம் விமான நிலையத்தில் காத்திருக்க நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானம் நேற்று முன் தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சீனாவின் குவாங்சூ சர்வதேச விமான நிலையத்துக்கு பயணிக்கவிருந்தது.

எனினும், குறித்த விமானம் புறப்பட தாமதமானதால் பயணிகளை விமான நிலையத்திலேயே தங்க வைப்பதற்கு சிறீலங்கன் விமான சேவை அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

அதன்படி நேற்று முன் தினம் இரவு 9 மணி வரை விமான நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த குறித்த பயணிகள், பின்னர் இரவு 9.20 அளவில் விமானத்தில் ஏற்றப்பட்டனர்.

எனினும், விமானம் புறப்படுவதற்காக ஓடுபாதைக்கு வந்த போதிலும், விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாகக் கூறிய ஊழியர்கள், பயணிகளை விமானத்தில் இருந்து இறக்கியுள்ளனர்.

மற்றொரு விமானம் மூலம் சீனாவுக்கு தம்மை அழைத்துச் செல்ல அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் பயணிகளுக்கும் விமான சேவை அதிகாரிகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. (அ)

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 28
நாட்டில் கடந்த 10 மாதங்களில் மாத்திரம் 1,250 தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த தொழுநோயாளர்களில் 14 வயதுக்குட்பட்ட 131 சிறுவர்கள் அடங்குவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 256 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 138 பேரும், மட்டக்களப்பில் 128 பேரும் களுத்துறையில் 92 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், அடையாளம் காணப்பட்டுள்ள தொழுநோயாளர்களில் 50 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என சுகாதாரத் துறை சுட்டிக்காட்டியுள்ளது.

# தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகளை மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, நவ. 28
2023 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, நேற்று முதல் அடுத்த மாதம் நான்காம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிகழ்நிலை ஊடாக குறித்த விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு விண்ணப்பதாரர்களை அந்த திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

## விளையாட்டுத்....

ரொஷான் ரணசிங்க, நீர்பாசனம், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரம் என அனைத்து விதமான அமைச்சுப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை கிரிக்கெட்டுக்கு ஐ.சி.சி தடை விதித்ததுடன், இலங்கை கிரிக்கெட் தொடர்பில் பல்வேறு பிரச்னைகள் நாட்டில் நிலவி வருகின்றன. இந்தநிலையிலேயே அமைச்சர் ரொஷான் ரணசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், தற்போதைய சூழலில் தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கான முழு பொறுப்பையும், ஜனாதிபதியும், சாகல ரத்நாயக்கவுமே ஏற்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

தமது வாழ்க்கை தொடர்பில், நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

134 பேர் வாக்களித்து ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்திருப்பினும், அவர் பழிவாங்கல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், தமது உயிருக்கு அச்சுறுத்தல் நிலவும் நிலையில், பாதுகாப்பு அவசியமாகும் என அவர் தெரிவித்திருந்தார். (அ)

## கண்ணீரில்....

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரில், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டு தாயக விடுதலைக்காக உயிர் நீர்த்த மாவீரர்களுக்கு சுடரேற்றி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

## உதயன்....

மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வெளியான "உதயன்" பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக வெளியான செய்தி தொடர்பாகவே பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் பத்திரிகை ஆசிரியரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களால் மாவீரர் தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், "உதயன்" பத்திரிகை ஆசிரியர் கொழும்புக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு நேற்றுக் காலை 9 மணிக்கு அழைக்கப்பட்ட "உதயன்" பத்திரிகை ஆசிரியரிடம் பிற்பகல் ஒரு மணிவரையில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டதுடன், வாக்குமூலமும் பதிவு செய்தனர்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வெளியான "உதயன்" பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாரனின் பிறந்தநாள் தொடர்பான செய்தி, அவரது ஒளிப்படத்துடனும், மறுநாள் நடைபெறவிருந்த மாவீரர் நாள் அஞ்சலிக்கு அழைப்பு விடுக்கும் செய்தி ஒன்றும் வெளியாகியிருந்தன. இவை தொடர்பாகவே பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக ஏற்கனவே யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் ஒரு செயற்பாடாகவே இது நோக்கப்படுகின்றது. (அ)

## வடக்கு - கிழக்கில்....

இரட்டைவாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அளம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சன், முள்ளிக்குளம் துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, தாண்டியடி, வாகரை கண்டலடி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்திலும், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதேவேளை, இறுதி நிமிடத்தில் உட்புகுந்த பொலிஸாரின் அராஜகத்துக்கு மத்தியில் மட்டக்களப்பு தரவையில் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது. அங்கு நுழைந்த பொலிஸார் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறக்கொடிகளை அறுத்தெறிந்தனர்.

**யாழ்ப்பாணம் - கோப்பாய்**

யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக ,மாவீரர் நாளான இன்றைய தினம் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில், நினைவேந்தல் இடம்பெற்றது.

**கொடிகாமம்**

யாழ்ப்பாணம் - கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நேறறு மாலை முன்னெடுக்கப்பட்டன.

அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகச்சுடரை மாவீரர்களான கப்டன் ரசியன், மேஜர் ரெஸ்ரார்,மேஜர் வண்ணன் ஆகியோரின் தாயாரும் மற்றும் மாவீரர் குமரர் மற்றும் சந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் பொதுச்சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், சகோதரர்கள்,உறவுகள்,சமூக ஆர்வலர்கள்,அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

**எள்ளங்குளம்**
**மாவீரர் துயிலும் இல்லம்**

யாழ்ப்பாணம் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக ,மாவீரர் நாளான இன்றைய தினம் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதான ஈகச் சுடரினை கடற்கரும்புலி மாவீரர் தமிழினியின் தந்தையார் முத்துலிங்கம் சிவப்பிரகாசம் ஏற்றி வைத்தார்.

**சாட்டி மாவீரர் துயிலும் இல்லம்**

யாழ்ப்பாணம் - தீவகம், சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்திப்பட்டது.

ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர், மற்றும் உறவினர்கள் சாட்டி மாதா தேவாலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பொது ஈகச்சுடர் முன்னாள் போராளியும், இரண்டு மாவீரர்களின் தந்தையுமான வி.கந்தசுவாமியினால் ஏற்றப்பட்டது.

**முல்லைத்தீவு**
**இரட்டைவாய்க்கால்**

இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தந்தையான தனபாலசிங்கம் ஏற்றி வைக்க ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

**முல்லைத்தீவு கடற்கரை**

முல்லைத்தீவு கடற்கரையில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் உணர்வு பூர்வமாக ஒன்று திரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடற்கரையில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடரை கடற்கரும்புலி மேஜர் நிதர்சன் அவர்களின் தாயார் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

**வவுனியா ஈச்சங்குளம்**
**மாவீரர் துயிலும் இல்லம்**

வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியில் 561 ஆவது இராணுவ தலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நினைவேந்தல்கள் இடம்பெற்ற.

இதன் போது மணி ஒலிக்கப்பட்டு, ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தின் பிரதான ஈகச்சுடரினை மேஜர் உமாசங்கர் மற்றும் கப்டன் கஜலக்சுமி ஆகியோரின் தாயார் வள்ளிப்பிள்ளையால் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனையடுத்து நினைவேந்தலில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்களால் சுடர் ஏற்றி நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு மாவடிமுன்மாரி**

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலைப் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் திங்கட்கிழமை மாலை 6.05 மணிக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத் தாது ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி சொலுத்தினர்.

குறித்த மாவீரர் துயிலும் இல்லத்தைச் சூழ பொலிசார் அவர்களது கடமையில் ஈடுபட்டிருந்துடன் அவ்வப்போது நிகழ்வை குழப்பும் வகையில் ஏற்பாட்டா ளர்களுடன் தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்த துடன், கலந்து கொண்டிருந்த பொது மக்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் பொலிசார் அவர்களது கைபேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

**மட்டக்களப்பு - வாகரை**

மட்டக்களப்பு வாகரையில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

**மன்னார் - பண்டிவிரிச்சான்**
**மாவீரர் துயிலுமில்லம்**

மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒன்று திரண்ட மக்கள் சுடரேற்றி உணர்வுபூர்வமாக தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பொதுச் சுடர் ஏற்றப்பட்ட பின் மாவீரர்களின் உறவுகள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.இதன் போது மாவீரர்களின் உறவுகள் அருட்தந்தையர்கள்,அருட் சகோதரிகள்,அரசியல் பிரதி நிதிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

**ஆட்காட்டிவெளி**

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு,மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வு பூர்வமாக மாவீரர் நினைவு தினம் இன்றைய தினம் நேற்று மாலை நினைவு கூரப்பட்டது.

தமிழ் தேசிய விடுதலைக்காக தனது மகனை கரும்புலியாக வழங்கிய தந்தை பொதுச் சுடரை ஏற்றி எழுச்சி பூர்வமாக நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார் .

**திருகோணமலை**

திருகோணமலை மாவட்டம் சம்பூர் ஆலங்குளம் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் பொலிஸாரால் தடுக்கப்பட்ட நிலையில், சம்பூர் பத்திர காளி கோவில் முன்றலில் அனுஷ்டிக்கப்பட்டது. (அ)

## ரொஷானின்....

ரொஷான் ரணசிங்க அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டதை யடுத்து, அந்தந்த அமைச்சுக்கள் வெற்றிடமாகின.

அந்த அமைச்சுக்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## கவலை....

மேற்கோள்காட்டி அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தாம் பதவி நீக்கப்பட்டமை தொடர்பில் கவலையடைய போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது பதவி நீக்கத்தை தொடர்ந்து, அமைச்சின் உறுப்பினர்களிடமிருந்து விடைபெற்று வெளியேறிய போதே, அவர் இதனை ஊடகங்களுக்கு கூறினார். (அ)

## யாழ்....

மூன்று மாவீரர்களின் தயார் ஒருவர் ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

இந்த நிலகழ்வில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## லண்டனிலும்....

சர்வதேச நாடுகளிலும் சிறப்பு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்று வந்தன.

நேற்று திங்கிட்கிழமை பிரித்தானியாவின் லண்டன் நகரில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் மாவீரர்களின் உறவினர்கள் மற்றும் பெருந்திரளான தமிழ் மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தரவை...

மக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் செ.கஜேந்திரன் உள்ளிட்டோருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

துயிலுமில்லத்திற்கு சப்பாத்து கால்களுடன் உள்நுழைந்த பொலிஸார், அங்கு கட்டப்பட்ட கொடிகளை அறுத்து எறிந்ததுடன், தீபங்களையும் பிடுங்கி எறிந்தனர்.

பொலிஸாரின் இந்த அராஜக செயற்பாட்டை எதிர்த்து மக்கள் கூக்குரலிட்டபோதும், நிகழ்வினை குழப்பும் நடவடிக்கை பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பொலிஸாரின் கடும் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கதறியழுத வண்ணம் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அவர்களது உறவுகளால் அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu




யாழ்.பல்கலைக்கழக வாயிலில் மாவீரர் தின நினைவேந்தலை முன்னிட்டு அலங்கார வளை வொன்று அமைக்கப்பட்டுள்ளது. (அ)

# எனக்கு ஏதேனும் நடந்தால் ஜனாதிபதியே பொறுப்பு!

## அமைச்சர் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, நவ. 28

**“எனது உயிருக்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு ஜனாதிபதியும் சாகல ரத்நா யக்கவும் பொறுப்பு கூற வேண்டும்.”**

**-இவ்வாறு தெரிவித்தார் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க.**

**நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபைக்கு சென்று கூறுகின்றார் ஊழல் மோசடிகளை ஒழிக்கவேண்டும் என்று.

அதற்காக செயற்படுகின்ற என்னை வேறு விதமாக சித்தரிக்க முயற்சிக்கின்றார்கள்.

பணம் கொடுத்து என்னை கொலை செய்ய முயற்சிப்பார்கள்.

அவ்வாறு இல்லையெனின் போதைப்பொருள் கடத்தல்காரராக சித்திரிக்க முயற்சிப்பார்கள்.

ஒரு அமைச்சராக உள்ள என்னுடைய பாதுகாப்பில் அரசியல் மற்றும் நீதித்துறையின் தலையீடுகள் தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

இது அரசியலில் ஒரு புதிய பிளவாக இருக்கவேண்டும். அதில் என் உயிர் போய்விடலாம். நான் நெடுஞ்சாலையில் கொல்லப்படலாம்.



அது நாளையா, இன்றோ அல்லது நாளை மறுநாளோ என்று எனக்குத் தெரியவில்லை. ஜனாதிபதி மற்றும் அதற்கு சாகல ரத்நாயக்க பொறுப்பேற்கவேண்டும்.

ஆனால் இந்த 134 வாக்குகளை அவருக்கு அளித்தது, அவர் ஜனாதிபதியாகி எம்மைப் பழிவாங்குவதற்காகவா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனக்கு வாழ்வதற்கான உரிமையை பெற்றுத் தாருங்கள். வேறு நாடுகளுக்கு அடைக்கலம் கோரி செல்ல நான் தயாராக இல்லை.

கிரிகெட் பிரச்னை தற்போது முடிவடையவில்லை என்றால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக இந்த பிரச்னையை முடிப்பேன்-என்றார். (அ)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்தில் தஞ்சம்!

சென்னை, நவ. 28

இலங்கையில் இருந்து படகு மூலம் சென்ற மேலும் ஏழு பேர் தமிழகத்தில் தஞ்சம் கோரியுள்ளனர்.

மன்னார் பகுதியில் இருந்து அவர்கள் படகு மூலம் சென்று தனுஷ்கோடியை அடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் கடலோர காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, மண்டபம் ஏதிலிகள் முகாமில் தங்க வைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் - சுழிபுரத்தைச் சேர்ந்த குறித்த ஏழு பேரும், ஒரே குடும்ப உறுப்பினர்கள் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# வல்வெட்டித்துறை கடலில் மாவீரர்களுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை ரேவடிக் கடற்கரையில் நேற்று மாவீரர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பைச் சேர்ந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் க. சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக, கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)







# முதல் மாவீரன் சங்கருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் என அழைக்கப்படும் சத்தியநாதனுக்கு ஈகச் சுடரேற்றி நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்துக்கு முன்பாக ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தினர். (அ)

# தியாகதீபம் திலீபனுக்கு நல்லூரில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாளான நேற்று திங்கட்கிழமை அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலேயே ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செய்தனர். (அ)



# மாவீரர் நினைவுக்கு தடை கோரும் மனு; நிராகரித்த ஊர்காவற்றுறை நீதிமன்றம்

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை கோரும் பொலிஸாரின் மனு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நினைவேந்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தடை செய்யப்பட்டுள்ள சிவப்பு, மஞ்சள் வர்ணங்கள் நினைவேந்தலின்போது பயன்படுத்தப்படவுள்ளதாகவும் நீதிமன்றில் தெரிவித்த பொலிஸார், நினைவேந்தல்களுக்கு தடை உத்தரவு விதிக்கக் கோரினர்.

இதன்போது முன்னிலையான சட்டத்தரணிகள்,

மஞ்சள், சிவப்பு வர்ணங்கள் தடை செய்யப்பட்டதாக இருந்தால் இலங்கையின் தேசியக் கொடியில் இருக்கும் குறித்த வர்ணங்களை நீக்கிவிட்டு வருமாறு வலியுறுத்தினர்.

இந்நிலையில்,

வழக்கு விசாரணையில் பொலிஸாரின் கோரிக்கை மனு நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது என்று சட்டத்தரணி க. சுகாஸ் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# நெதர்லாந்தில் வலதுசாரி ஆட்சி! புகலிட அகதிகள் - முஸ்லிம்களுக்கு எதிரான கட்சி: ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுமா?

ஸ்பெயின், இத்தாலி, ஜெர்மனி, ஸ்லோவாக்கியா, போலந்து வரை பல ஐரோப்பிய நாடுகளிலும், வலதுசாரி கட்சிகளின் கரங்கள் ஓங்கத் தொடங்கியுள்ளன. அந்த வரிசையில் இப்போது நெதர்லாந்தும் இணைவதற்கு சான்றாக கீர்ட் வில்டர்ஸ் (Geert Wilders) தலைமையில் புதிய கட்சி ஆட்சியை கைப்பற்றி உள்ளது.

நெதர்லாந்தின் புதிய பிரதமராகும் இஸ்லாமிய எதிர்ப்பாளரான கீர்ட் வில்டர்ஸ் தேர்தல் வெற்றியால் ஐரோப்பா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இரண்டாம் உலக போருக்கு பின் நெதர்லாந்தில் பெரிய மாற்றத்தை இத்தேர்தல் வெற்றி ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாம் எதிர்ப்பில் உறுதியாக உள்ளதோடு, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வாக்கெடுப்பு நடத்துவதாக கீர்ட் வில்டர்ஸ் என்பவரின் கட்சி நாடாளுமன்ற தேர்தலில் முன்னிலை பெற்றுள்ளது.




**அகதிகளை அரவணைத்த நாடு:**

நெதர்லாந்து நாடானது போர், பேரிடர் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்படும் மக்களை அந்நாடு அகதிகளாக அரவணைத்து வரவேற்றது. இதனால் ஆண்டுதோறும் நெதர்லாந்து நாட்டுக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வந்தது.

ஆயினும் வெளிநாடுகளில் இருந்து புலம்பெயரும் ஆயிரக்கணக்கான அகதிகள் அந்நாட்டு அரசுக்கு பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளனர். பூதகரமாக உருவெடுத்த இப்பிரச்னையால், நெதர்லாந்தில் மார்க் ரூட் தலைமையில் இருந்து வந்த கூட்டணி ஆட்சி கடந்த ஜூலை மாதம் முடிவுக்கு வந்தது. அத்துடன் வாழ்க்கைச் செலவு நெருக்கடி, வீடுகள் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்னைகளும் ஒவ்வொன்றாக தலைதூக்க தொடங்கின.

நெதர்லாந்து பிரதமராக இருந்த மார்க் ருடே கடந்த 2010ம் ஆண்டு முதல் பிரதமராக பணியாற்றினார். 13 ஆண்டுகளாக பிரதமராக இருந்தமையால் நெதர்லாந்தில் அதிக ஆண்டுகள் பிரதமராக இருந்தவர் என்ற பெருமை மார்க் ருடேவுக்கு கிடைத்துள்ளது. சமீபத்தில் அவர் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.

**நெதர்லாந்தின் டொனால்டு ட்ரம்ப் :**

நெதர்லாந்து பொதுத் தேர்தலில் கடும் வலதுசாரி அரசியல்வாதி வெற்றி அடைந்தாலும், அறுதிப் பெரும்பான்மை இல்லாமையால் கூட்டணி ஆட்சியை முன்னெடுக்க இருப்பதாக கீர்ட் வில்டர்ஸ் அறிவித்துள்ளார்.

நெதர்லாந்து பாராளுமன்ற தேர்தல் நடந்ததில் ‘சுதந்திரத்திற்கான கட்சி” (PVV) எனும் வலதுசாரி கட்சி, 150 இடங்களில் 37 இடங்களை வென்றுள்ளதுடன், அக்கட்சியின் தலைவர் கீர்ட் வில்டர்ஸ் மேலும் இரு கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க உள்ளார்.

> நெதர்லாந்தின் டொனால்டு ட்ரம்ப் என அறியப்படும் கீர்ட் வில்டர்ஸ் (Geert Wilders) என்பவரது வலதுசாரி கட்சியே நெதர்லாந்தில் ஆட்சிக்கு வர இருக்கிறது. ஐரோப்பா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நெதர்லாந்தின் டொனால்டு ட்ரம்ப் என அறியப்படும் கீர்ட் வில்டர்ஸ் என்பவரது கட்சியே நெதர்லாந்தில் ஆட்சிக்கு வர இருக்கிறது. ஐரோப்பா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நெதர்லாந்தில் பிரதமர் தேர்தல் முடிவால் கடும் அச்சம் அங்கு வாழும் முஸ்லீம் சமூக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இத்தேர்தல் வெற்றி குறித்து கீர்ட் வில்டர்ஸ் தெரிவிக்கையில், வாக்காளர்கள் தங்கள் எண்ணங்களை உரத்த குரலில் கூறி உள்ளனர். அவர்களின் நம்பிக்கை எக்காரணம் கொண்டும் வீண் போகாது. கூட்டணி குறித்து விரைவில் ஒரு சமரச முடிவு எட்டப்படும். நாங்கள்தான் ஆட்சி அமைப்போம். ‘எங்களின் நாடு எங்கள் வசமே மீண்டும் வரும்” என இனிமேல் டச்சு மக்கள் உறுதியுடன் இருக்கலாம்.




சுனாமி போல் நம் நாட்டிற்குள் நுழையும் அகதிகளின் எண்ணிக்கையும், அனுமதியின்றி நம் நாட்டிற்குள் நுழைந்து புகலிடம் பெறுபவர்களின் எண்ணிக்கையும் இனி படிப்படியாக குறைந்து விடும் என புகலிட மக்களை அச்சுறுத்தும் வண்ணம் கருத்து தெரிவித்துள்ளார்.

இவரது அரசியல் சித்தாந்தம் அமெரிக்காவின் டொனால்ட் டிரம்ப் போன்று கருதப்படும் வெற்றியா னது விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் அவரது கட்சி, இஸ்லாமியர்களுக்கும், ஐரோப்பிய ஒன்றிய ஒருங்கிணைப்பிற்கும் எதிராக பார்க்கப்படுகின்றது.

நெதர்லாந்து நாட்டின் எல்லைகளை அகதிகளுக்கு மூடுவதும், ஆவணங்கள் இல்லாமல் அந்நாட்டிற்குள் வசித்து வரும் புலம் பெயர்ந்தவர்களை வெளியேற்றுவதும் இனி தொடங்கும் என நம்பப்படுகிறது. நெதர்லாந்து நாட்டின் மக்கள் தொகையில் இஸ்லாமியர்கள் 5 சதவீதம் பேர் உள்ளனர். அவர்கள் இரண்டாம் தர குடிமகன்களாக தள்ளப்படலாம் என இஸ்லாமிய அமைப்புகள் அஞ்சுகின்றன.



**புகலிட அகதிகளை வெளியேற்றுவாரா?**

கீர்ட் வில்டர்ஸ் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது, ‘அகதிகளாக புகலிடம் கோரி வருபவர்களும், சட்ட விரோதமாக குடியேறியவர்களும் சொகுசு கப்பலில் கிடைப்பதை போன்ற சுகங்களை அனுபவித்தும், உண வுகளை உண்டும் மகிழ்கின்றனர். ஆனால், இவர்களுக்கு அரசாங்கம் செலவு செய்ய டச்சு குடும்பங்கள் தங்கள் மளிகை மற்றும் இதர அத்தியாவசிய செலவுகளையும் குறைத்து வாழ வேண்டி உள்ளது” என கீர்ட் வில்டர்ஸ் குற்றம் சாட்டி வந்தார்.

அவரின் தேர்தல் அறிவிப்பில் இஸ்லாமிய பள்ளிகள், மசூதிகள், முகத்தை மூடும் உடைகள் ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்படும் என்று அக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் முன்பு தெளிவாக தெரிவிக்கப்பட்டிருந் தது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்தை போல், நெதர்லாந்தும் வெளியேறுவது குறித்து முடிவெ டுக்கப்படும் என்றும் கீர்ட் வில்டர்ஸ் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கீர்ட் வில்டர்ஸ் கட்சிக்கு கிடைத்துள்ள வெற்றியை கண்டு பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தங்கள் சித்தாந்தங்களை அவரை போலவே வகுக்க தொடங்கலாம் என அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**நெதர்லாந்து வலதுசாரி கட்சி வெற்றி:**

இஸ்லாமிய மக்களின் புலம்பெயர்தலே ஐரோப்பிய நாடுகளில் தீவிர்வாதத்தை வளர்ப்பதாக வெளிப்படையாக கருத்து தெரிவித்து வரும் கீர்ட் வில்டர்ஸ் வெற்றியை அடுத்து ஐரோப்பா முழுவதும் உள்ள வலதுசாரி தேசியவாதிகள் அவருக்கு வாழ்த்து தெரிவிக்க ஆர்வம் காட்டியுள்ளனர்.

இதுபோன்ற காரணங்களாலையே 2004 முதல் அவர் தீவிர பொலிஸ் பாதுகாப்பில் இருந்து வந்தார். அத்துடன் 2009 முதல் பிரித்தானியாவில் நுழைய அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

தேர்தல் நடக்க மூன்று நாட்கள் முன்னர் தான் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து, அதை கட்சியின் தேர்தல் தலைமையகமாக பயன்படுத்தியுள்ளனர். தேர்தல் பரப்புரையின் கடைசி கட்டத்தில் தான் இவரது கட்சி மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. தமது கட்சி நெதர்லாந்து அரசியலில் பெரும் வெற்றியை ஈட்டும் என கீர்ட் வில்டர்ஸ் கூட எதிர்பார்க்கவில்லை என்றே கூறப்படுகிறது.

இறுதிக்கட்ட தேர்தல் பரப்புரையின் போது, புலம்பெயர் மக்கள் வருகையை கட்டுப்படுத்த இருப்பதாகவும், குடியிருப்பு சிக்கல்களுக்கு தீர்வு காண இருப்பதாகவும், சுகாதார சேவையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பரப்புரையில் அவர் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார். அத்துடன் தனது இஸ்லாமியர்களுக்கு எதிரான கடும்போக்கு நிலையை பரப்புரைகளில் குறைத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும், நெதர்லாந்தின் புதிய பிரதமாரக இவர் ஆட்சிக்கு வந்த பின் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் உச்சிமாநாடுகள் பதட்டமானதாகவும், மேலும் குழப்பமானதாகவும் மாறக்கூடும் என்றே தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து நெதர்லாந்து வெளியேற வேண்டும் என்று தொடர்ந்து பரப்புரை செய்து வருபவர் கீர்ட் வில்டர்ஸ். ஆயினும் நெதர்லாந்து மக்களுக்கு இதில் உடன்பாடு இல்லை என்றாலும், தமது கொள்கையில் தாம் உறுதியாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் நெதர்லாந்தில் உள்ள அகதி அந்தஸ்து பெறாதவர்களும், இஸ்லாமிய மக்களும் இனி நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்றே அஞ்சப்படுகிறது. ●

# எல்லாவற்றுக்கு பின்னாலும், யாரோ இருப்பதாக கூறுபவர்களுக்கு பின்னால் இருப்பவர்கள் யார்?



யதீந்திரா

2009இற்கு பின்னரான அரசியல் என்பது, அடிப்படையிலேயே, ஒரு போர் தோல்விக்கு பின்னரான அரசியலாகும். ஒரு போர் தோல்விக்கு பின்னரான அரசியல் போக்கானது, கடந்த காலத்தை, ஒரு ஆசானாகக் கொண்டே நகர்த்தப்பட வேண்டும். ஏனெனில் கடந்த காலத்தில் நிகழ்ந்தவைகள் அனைத்தும் சரியென்றால், ஒரு போதுமே தோல்வி ஏற்பட்டிருக்காது, எனவே ஒரு தோல்வி நிகழ்கின்றது என்றால் - அங்கு ஏராளமான தவறுகள் நடந்திருக்கின்றது என்பதே பொருளாகும். ஆனால் நமது சூழலிலோ, கடந்தகாலத்திலிருந்து கற்றுக்கொள்ள எவருமே முயற்சிக்கவில்லை.

சுயவிமர்சனம் சார்ந்து சிந்திப்பதற்கு அனைவருமே அஞ்சினர். அதனை மறுப்பதற்கு புதிய விளக்கங்கள் புனைந்தனர். ஒரு பெரும் தோல்வியின் பின்னர், எழுந்து நிற்க முயற்சிக்கும் ஒரு சமூகம் செய்ய வேண்டியது சுயவிமர்சனமாகும். சுயவிமர்சனமின்றி எழுந்து நிற்பதை பற்றி யோசிக்கவே முடியாது. முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போல், யுத்தத்திற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியலில், முதல் நகர்விலேயே தமிழ் தேசிய அரசியல் ஒரு முள்ளில் சிக்கிக்கொண்டது. அந்த முள்ளின் பிடியிலிருந்து, இன்றுவரையில் தமிழ் தேசிய அரசியலால் அசைய முடியவில்லை. யுத்தம் முடிவுற்று பதின்நான்கு ஆண்டுகளாகிவிட்ட பின்னரும் கூட, இன்றுவரையில் முன்னோக்கி நகர்வதற்கான பாதை தெரியாமலேயே தமிழர் அரசியல் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த இடத்தில் எவருமே தங்களை தனித்துவமானவர்கள் என்று கூற முடியாது. தமிழ் மக்களின் நலன்களை வெற்றிகொள்வதில் அனைவருமே தோல்வியாளர்கள்தான். அனைவருமே பொறுப்பாளிகள்தான். இந்த விடயத்தில் தமிழ் சமூகத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு.

இந்த பின்புலத்தில் நோக்கினால் இரண்டு கேள்விகளை நமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும்.



ஒன்று, ஏன் முன்நோக்கி நம்மால் பயணிக்க முடியவில்லை?

இரண்டு, இந்த இடத்திலிருந்து நாம் எங்கு செல்ல முயற்சிக்கின்றோம்?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் தமிழ் சூழலில் திடமான பதில் இல்லை. இதன் காரணமாகவே எராளமான பதில்களும், அந்த பதில்களை நியாயப்படுத்துவதற்கான வாதங்களும் எட்டிப்பார்க்கின்றன.

அரசியல் எப்போதுமே சாத்தியங்களின் கலையாகும். சாத்தியங்களை கையாளுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்ற போது மட்டும்தான், அரசியல் நம்பிக்கையளிக்கும். வாய்ப்புக்களை தவறவிட்டால் அதன் பின்னர் முன்னைய வாய்ப்புக்கள் கிடைப்பதற்கு உத்தரவாதங்கள் எதுவுமில்லை. இதனை இன்னொரு வகையில் கூறுவதானால், பேருந்தை தவறவிட்டுவிட்டு பின்னாலிருந்து கையசைப்பதில் எந்தவொரு பயனுமில்லை. தற்போது தமிழ் தேசிய அரசியல் சூழலில் நடைபெறும் அனைத்து விவாதங்களும் இந்த அடிப்படையைக் கொண்டதுதான். வாய்ப்புக்களை தவறவிட்டால் ஒரு சமூகத்திற்கு என்ன நடக்கும் என்பதற்கான உதாரணம்தான் ஈழத் தமிழ் சமூகத்தின் இன்றைய நிலைமை.

இந்த பின்புலத்தில்தான் தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்ப விடயங்களை கையாள வேண்டும். இருப்பவற்றை கொண்டுதான் சமைக்க வேண்டும் என்றவாறான கருத்தை என்னைப் போன்றவர்கள் - தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றோம். தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி எவரெல்லாம் சிந்திக்கின்றாரோ, அவர்கள் வந்தடைய வேண்டிய இடம் இது ஒன்றுதான். இப்போது இதனை பலரும் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றனர். இந்த இடத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம்



> **பொய்யான கதைகளை பரப்ப முற்படுபவர்கள் அனைவருக்கும் இடையில் ஒரு ஒற்றுமையுண்டு. அனைவருமே இந்தியாவை சாடுபவர்களாக இருக்கின்றனர். அத்துடன், 13வது திருத்தச்சட்டத்தை ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கூட ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று வாதிடுபவர்கள். அவ்வாறாயின் இவர்களுக்கு பின்னாலுள்ள, அந்த திரைமறைவு சக்தி எது?**

கிடைக்கப்பெற்ற அரசியலமைப்பிலுள்ள விடயங்களை முதலில் கையாள வேண்டுமென்று நாம் கூறிவருகின்றோம். தமிழ் தேசிய கட்சிகளில் பெரும்பாலானவை இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்கின்றன.

யுத்தத்திற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் என்பது, அடிப்படையிலேயே, வெளிநாடுகளின் மீதான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதுதான். மனித உரிமை சார்ந்த அழுத்தங்களின் ஊடாக, இலங்கை அரசாங்கத்தை இறங்கிவரச் செய்வதுதான், தமிழர் அரசியலின் பிரதான இலக்காக இருந்தது. ஆரம்பத்தில் இந்தியாவை நோக்கி கோரிக்கைகளை முன்வைப்பதில், தமிழ் தேசிய கட்சிகள் பெரியளவில் ஆர்வம் காண்பித்திருக்கவில்லை. புலம்பெயர் சமூகத்தால் மேற்கு நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கைகளில் தாக்கங்களை ஏற்படுத்த முடியுமென்னும் தவறான நம்பிக்கையே மேலோங்கியிருந்தது.

கடந்த ஆண்டுதான், முதல் முதலாக, தமிழ் தேசிய கட்சிகள், இந்தியாவை நோக்கிச் சென்றிருந்தன. ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து, இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தன. கடந்த பதின்நான்கு வருடங்களில் இந்தியாவின் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு, தமிழ் கட்சிகள் ஒரு நகர்வை மேற்கொண்ட முதல் சந்தர்ப்பம் இதுதான்.

2015இல், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவை முற்றிலுமாக மறந்தே செயற்பட்டது. எவ்வாறு இந்தியாவின் உதவியில்லாமல் தனிநாடு ஒன்றை தங்களால் அடைய முடியுமென்று விடுதலைப் புலிகளின் தலைமை கருதிச் செயற்பட்டதோ, அவ்வாறானதொரு அணுகுமுறைதான், சம்பந்தனிடமும் இருந்தது. அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டம் பற்றி எவருமே பேச வேண்டியதில்லை என்று சம்பந்தன் கூழுரைத்தார் - நாங்கள் அதனைத் தாண்டி அதிக தூரம் சென்றுவிட்மோம் என்றார்.

ஆனால் இன்றோ, மீண்டும் தொடங்கிய இடத்திலேயே தமிழர் அரசியல் தேங்கிக்கிடக்கின்றது. சம்பந்தன் இன்னொரு வரலாற்று தவறையும் இழைத்தார். அதாவது, பிராந்திய சக்தியொன்றின் தலைவரும், உலகின் சக்திவாய்ந்த நபர்களில் ஒருவருமான இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை கைநழுவிட்டார். தமிழ் மக்களின் புத்திக் கூர்மையை பரிகசிக்கும் வகையில் அதற்கு பதிலளித்தார். தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதியின் மகனுக்கு திருமணம், அதனால் பிறிதொரு நேரத்தை தருமாறு இந்திய தூதரகத்திற்கு அறிவித்தார். இவ்வாறானவர்களை தங்களின் அரசியல் தலைவர்களாகக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்திற்கு, வெளிநாடுகள் எவ்வாறு உதவ முடியும்? அவ்வாறிருந்த போதும், இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களின் நியாயங்களுக்காக குரல் கொடுத்து வருகின்றது. இந்தியா ஒன்றுதான், வடக்கு கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நியாயமானது என்று வலியுறுத்திவரும் ஒரேயொரு நாடாகும்.

இந்தியா போதிய அழுத்தங்களை கொடுக்கவில்லை, என்றவாறான - ஒரு தவறான கருத்தை சிலர் முன்வைக்க முயற்சிக்கின்றனர். அத்துடன், இந்தியா தமிழ் மக்களின் நலன்களை 13வது திருத்தச்சட்டத்திற்குள் திணிக்க முயல்வதாகவும் அதற்காக பல முகவர்களை பயன்படுத்துவதா



கவும் பொய்யான கருத்துக்களை முன்வைக்க முயற்சிக்கின்றனர்.

2009இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் போக்கில் இது ஒரு நோயாகவே தொடர்கின்றது. யதார்த்தமாக சிந்தக்க வேண்டுமென்று எவரேனும் கூறினால் அவர்களுக்கு பின்னால் இந்தியா இருக்கின்றது. இந்திய பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பிய போதும், அதனை விரும்பாதவர்கள், இது இந்தியாவின் நிகழ்ச்சிநிரலென்றே கதைகளை புனைந்தனர். இவ்வாறு எல்லாவற்றுக்குப் பின்னாலும் யாரோ ஒருவரது கை இருப்பதாக கூறுபவர்களின் பின்னாலும் யாரோ ஒருவரது கை இருக்க வேண்டுமல்லவா?

(16ம் பக்கம் பார்க்க)

# 2,367 மாணவர் கல்வி அமைச்சால் பிரபல பாடசாலைகளுக்கு அனுமதி

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 28

கடந்த 3 ஆண்டுகளில் அனுமதிக்கப்படாத முறைகளின் கீழ், 2,367 மாணவர்கள் கல்வி அமைச்சினால் பிரபல பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சுமத்தியுள் ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை குறிப்பிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் கணக்காய்வாளர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2022ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான விசேட கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, குறித்த காலப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட முறைக்கு அப்பாற்பட்டு மாணவர்களை அனுமதிப் பதற்காக 3,308 கடிதங்களை கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவற்றில் 72 சதவீத கடிதங்கள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அதிகாரிகளின் கோரிக் கையின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (அ)

# அபுதாபியில் கட்டடத்திலிருந்து விழுந்த யாழ். வாசி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவர் அபுதாபியில் கட்டடம் ஒன்றில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளை, புளியடியை சேர்ந்த முருகேசு விஜயரத்தினம் (வயது 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் .

தொழில் நிமித்தம் அபுதாபியில் வசித்து வந்த அவர் கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி மூன்று மாடி உயர கட்டடத்தில் இருந்து தவறி விழுந்த நிலையில் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் அபுதாபியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தூதரகத்தின் உதவியுடன் வீட்டார் அவரை கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு கொண்டு வந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எல்லாவற்றுக்கு பின்னாலும், யாரோ இருப்பதாக...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் இவ்வாறான பொய்யான கதைகளை பரப்ப முற்படுபவர்கள் அனைவருக்கும் இடையில் ஒரு ஒற்றுமையுண்டு. அனைவருமே இந்தியாவை சாடுபவர்களாக இருக்கின்றனர். அத்துடன், 13வது திருத்தச்சட்டத்தை ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கூட ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று வாதிடுபவர்கள். அவ்வாறாயின் இவர்களுக்கு பின்னாலுள்ள, அந்த திரைமறைவு சக்தி எது?

இலங்கையின் வடக்கு கிழக்கு வரலாற்று ரீதியாக தென்னிந்தியாவுடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கும் பகுதியாகும். ஈழத் தமிழ் மக்களுக்கும் இந்தியாவிற்குமான பிணைப்பு மிகவும் வலுவானது. இவ்வாறானதொரு பின்புலத்தில், அண்மைக்காலமாக தமிழ் பகுதிகளுக்குள் சீனாவும் ஆங்காங்கே மூக்கை நுழைக்கின்றது. சீனாவின் ஊடுருவும் அணுகுமுறைகளில் ஒன்று, சென்று ஆடுவதாகும். இதில் முதலாவது செல்வது, பின்னர் ஆடுவதா அல்லது இல்லையா என்பது இரண்டாவது. தற்போது, வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிவாரணப் பொருட்களுடன் சீனா வட்டமிடுகின்றது. இவ்வாறானதொரு சூழலில், இந்தியாவை சாடும் கருத்துக்கள் வெளிவருவதை எவ்வாறு சந்தேகிக்காமல் இருக்க முடியும்?

சீனாவை தமிழ் தேசியவாத சக்திகள் எதிர்க்க வேண்டுமா, இல்லையா என்னும் புதிய வாழைப் பழமொன்றில், ஊசி ஏற்றுவதற்கு சிலர் முயற்சிப்பதாக தெரிகின்றது, இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் சொற்பமானவர்கள். ஆனாலும் வாழைப்பழத்தில் ஊசியிருப்பதை அறியாது, சிலர் விழுங்கிவிட்டால், அது மிகவும் ஆபத்தானது. சீனா எந்தக் காலத்திலும், தமிழர் விவகாரத்தை கருத்தில் கொண்ட நாடல்ல. அவ்வாறு கருத்தில் கொள்வதற்கான எந்தவொரு கடப்பாடும் அதற்கில்லை. தவிர, யுத்தத்திற்கு பின்னரான, தமிழர் கோரிக்கைகளான மனித உரிமை மற்றும் நீதி என்னும் சொற்களானது, சீனாவின் கொள்கைக்குள் என்றுமே அடங்காதது. இவ்வாறான பின்புலத்தில், இந்தியாவிற்காக சீனாவை எதற்காக எதிர்க்க வேண்டும் என்னும் கேள்வியே தவறானது. உண்மையில் இது எவரையும் எதிர்ப்பது பற்றியதல்லமாறாக, தமிழ் மக்கள் முன்னிறுத்தும் அரசியலின் அடிப்படையில், எவருடன் பேசலாம், எவருடன் பேச முடியாது என்பதாகும்.

இந்தியா அதன் வரலாற்றுப் பொறுப்பை, சரியான தருணங்களில் நிறைவேற்றிய ஒரு நாடு. ஆனால் அன்றைய சூழலை, தமிழர் தரப்போ வாய்ப்புக்களை புத்தி சாதுர்யமாக கையாளவில்லை. இதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தக்கட்டுரையாளர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டு, இந்தியாவின் மீது, குற்றம்சாட்டுவதில் எவ்வித பயனுமில்லை. இந்தியா ஒரு பிராந்திய சக்தி. அதே வேளை உலகின் முக்கிய சக்தி. அவ்வாறான ஒரு நாடு, அதன் நீண்டகால நலன்களை கருத்தில் கொண்டுதான் சில தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். நமக்கு சுடுகிற போதெல்லாம், மடியை பிடியுங்கள் - என்றவாறு, நாம் நாடுகளை நோக்க முடியாது. ஒரு காலத்தில், இந்தியா அதன் தோள்களை நமக்காக தந்தது. ஆனால் தமிழர் தரப்பு சந்தர்ப்பத்தை புத்திசாதுர்யமாக கையாளவில்லை. அதற்காக இப்போது எல்லாமே, முடிந்துவிட்டது என்பதல்ல அர்த்தம். இப்போதிருக்கும் வாய்ப்புக்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வது எப்படி, அதற்காக இந்தியாவை எவ்வாறு அணுகுவது என்று சிந்தித்தால், சில வாய்ப்புக்கள் தென்படலாம்.

